# “கண்டேன்..கண்டேன்..! கண்டறியாதன கண்டேன்! உண்டேன்.. உண்டேன்..! உவமையிலாத் தேனுண்டேன்!”

‘கண்கொள்ளாக் காட்சி’யென்று
களிப்பார்களே..
அது இதுதானா..!

‘கடலலைபோல் மக்கள் வெள்ளம்’
என்று
கழறுவார்களே..
அது இதுதானா!

‘படை பெருத்ததோ
பார் சிறுத்ததோ’
என்று
பாடுவார்களே..
அதுவும் இதுதானா!
என்று
கணிக்கவே முடியாமல்
கலங்கிப்போய் நிற்கிறேன்
நான்!

ஒரு மகத்தான
மக்கள் தலைவரைச்
சந்திக்கும்,
மக்களின் உணர்ச்சிப்
பிரவாகத்தை
உடனிருந்து அனுபவித்த
உத்வேகத்தில்
மனத்தைச் சிதறவிட்டு
மயங்கிப்போய் நிற்கிறேன்
நான்!

தொடர்வண்டிப் பயணத்தைத்
தொடங்கிய போதே
சென்னையே திரண்டாற்போல்
சென்ட்ரல் குலுங்கியது!

அன்னைமுகம் காணும்
அத்தனை முறையும்
ஆனந்தம் அடையும்
குழந்தையைப் போலத்

தலைவர் முகம்பார்க்கத்
தாவிய தொண்டர்கள்
கூவிய இளைஞர்கள்
கூடிய பொதுமக்கள்
மேவிய தாய்மார்கள்
அதிர வைத்தனர்
ரயில் நிலையத்தை!

‘எங்களுக்கான ஒரே தலைவர்
இவர்தான்’ என்பதை
உள்ளங்கை நெல்லிபோல்
உணர்த்துகிற பெருங்கூட்டம்
காலைப் பொழுதைக்
கவிப்பொழுதாய் ஆக்கியது!

‘சிந்திக்கவே முடியாத
சிறப்புகளை எல்லாம்
செய்யவே பிறந்தவர்
சேகர்பாபு என்னும்
பொய்யா மொழிக்குரிய
புயல்பாபு’ தலைமையில்
வழியனுப்பு விழாவே
வசந்தம்போல் அமைந்தது!

நீரில் கலந்த நீரைப் போல
நெஞ்சங் கலந்து
நிறைந்த கூட்டம்,
ஏறி வண்டியில்
அமரும் வரைக்கும்
ஊறிப் பெருகும்
ஊற்றைப் போல
வாழிய முழக்கம்
வழங்கி மகிழ்ந்தது!

முல்லைப் பூவாய்
முறுவலிக்கின்ற நம்
முதல்வர் முகத்தில்..
பெருமிதத் தென்றல்
பேசிக் கொண்டிருந்தது!
வெற்றிப் பொன்னொளி
வீசிக் கொண்டிருந்தது!

நெய்யுறக் கொளுத்தப்பட்ட
நெருப்பைப் போல
நிமிர்ந்து கனன்றது
என் நெஞ்சம்!

**எட்டுக் கோடி மக்களின்
இதயக் கோயிலில்
எழுந்தருளி இருக்கும்
இந்த மனிதர்..
எத்துணை எளிமையாய்
இறங்கி நடக்கிறார்!
எத்துணைச் சிகரங்கள்
ஏறி ஜெயிக்கிறார்!
எத்தனை கணைகளை
எதிர்த்துப் பிளக்கிறார்!**

‘அவரோடு பயணிக்கும்
அற்புதநாள் ஒவ்வொன்றும்
வரலாற்றில் பதிவாகும்
வரைபடங்கள் அல்லவா’
என்றெல்லாம்
நினைந்து நினைந்து
நிமிர்ந்தது என் நெஞ்சம்!

‘ஒரு செல்வந்தர் முன்னால்
ஓர் ஏழை நிற்பதுபோல்
கற்றறிந்தவர் முன்நின்று
கல்லாதவன் பெறவேண்டும்
கல்வியை’ என்றார் வள்ளுவர்!
அந்தக்
கூரிய குறள் என்னைக்
கூப்பிட்டுக் கூறியது:
‘இவர் முன்னால் நின்றாலும்
இவர் பின்னால் சென்றாலும்
கற்றுக் கொள்ளலாம்
கலை பலவற்றை’ என்று!

இரண்டுநாள் பயணத்தில்
என்தலைவர் கவனத்தில்
இருந்துநான் கற்றதை
என்சொல்வேன்! என்சொல்வேன்!

‘இப்படியோர் தலைவனா
இப்படியோர் குணாளனா
இவனைக் காண்பதிலே
இத்தனை எழுச்சியா
வெயிற்பொழுதில் கூட
வெண்ணிலவின் குளிர்ச்சியா
எப்பொழுது பார்த்தாலும்
இதே மகிழ்ச்சியா?’ என்று
ஆச்சரியக் குறிகள்
அப்பிய முகத்தோடுதான்
இப்போதும் இருக்கிறேன்
நான்!

சீர்மேவும் தலைநகர்
சென்னையில் புறப்பட்டுக்
காற்றைக் கிழித்தபடி
காட்பாடி வந்தது
விரைவு வண்டி!

அதைவிட விரைவாகப்
பறந்த என் மனக்குதிரை
எட்டிப் பார்த்தபோது
எதிரே
காட்பாடி தெரியவில்லை!
கண்ணெட்டும் வரைக்கும்
கழகக் கொடிகளே தெரிந்தன!
தன்மானத் தொண்டர்களின்
தலைகளே தெரிந்தன!

அங்கே தொடங்கிய
ஆர்ப்பரிப்பு, கொண்டாட்டம்
அணிவகுப்பு, மலர்மாலை
ஆர்வத் துடிதுடிப்பு,
அணுவளவும் குறையவில்லை,
அடுத்தநாள் வரைக்கும்!

‘தொண்டு செய்து பழுத்த பழம்
அண்ணன் துரைமுருகன்’
தலைமையில்..
மண்ணுக்குக் குடைபிடிக்க வந்த
மனித நிழல் தளபதியைக்
கண்ணுக்கு நிகராகக்
காண்கின்ற பொதுமக்கள்
வரிசை கட்டி நின்று
வரவேற்று மகிழ்ந்தார்கள்!

கதிரவனின் ஆனந்தக்
கதிர்போலத் தோன்றிவரும்
கதிர் ஆனந்த் எம்.பி.யும்
கச்சைகட்டி நின்றிருந்தார்!

வண்ணத் தமிழ்ச்சிறகால்
வானத்தை அளந்து
காலத்தை வென்ற
கலைஞரின் தவப்புதல்வர்,
கால்கொண்டு நடக்கும்
காவியமாய் நடந்துவர
ஊர்கொண்ட இன்பத்தை
உரைசெய்ய முடியுமா!
நேர்கண்ட காட்சிகளை
வரையத்தான் முடியுமா!

சாலைச் சந்திப்பு
வேலூரில் நிகழ்ந்தது!
சோலைச் சந்திப்பில்
சுற்றிவரும் வண்டுகளாய்த்
தானைத் தலைவனின்
தங்கமுகம் தரிசிக்கக்
காத்திருந்த மக்களைக்
கணக்கெடுக்க முடியாமல்
கடுங்குழப்பம் நிலவியது!

சாலை ஓரத்தில்
சங்கமித்த மக்களின்
கைதொடும் தூரத்தில்
தளபதியார் நடக்க..
‘எங்களைக் காக்கும்
தலைவன் வந்தானோ
எங்களைப் பார்க்க
இறைவனே வந்தானோ’
என்று குதித்த
இதயங்கள் எத்தனை!

‘மதங்களைப் பார்க்கும்
மனிதர்கள் முன்னே
மனங்களைப் பார்க்கும்
மன்னவன் இவன்’என்று
நெகிழ்ந்து நோக்கிய
நெஞ்சங்கள் எத்தனை!

பாலூறித் ததும்புகிற
பரவச முகத்தோடு
தேனூறும் வார்த்தைகளைத்
தெரிவித்து மகிழ்ந்த
திருவாய்கள் எத்தனை!

ஆயிரங்கள் பலதந்து,
அன்றாடம் பேருந்தில்
அளவற்ற பயணங்கள்
அளித்தவரைப் பாராட்ட
அலைமோதி நின்ற
தாயுள்ளம் எத்தனை!
‘காலை எழுந்தவுடன்
குளித்து நீ
பள்ளிக்கு வந்துவிடு
களித்து!
காலைச் சிற்றுண்டி
அளித்துஉன்னைக்



காத்திடுவேன் கல்வி
கொடுத்து’ என்று
புதிய பாரதியாய்ப்
புறப்பட்டு நிற்கும்
புத்துலகத் தலைவனைப்
போற்றிக் கும்பிட்ட
கரங்கள்தாம் எத்தனை!

அப்பப்பா..இத்தகைய
அற்புதங்கள் எல்லாம்
ஒப்பில்லா நம்தலைவர்
உயர்குணங்களுக்குக்
கப்பமாய்க் கிடைத்த
காணிக்கை அல்லவா!

‘அணைக்கட்டுத் தொகுதியை
ஆயிரம் தலைமுறைகள்
நினைக்கட்டும்’ என்று
நெடும்பணி செய்துவரும்
என்
நெஞ்சுக்கினிய நேசன்
நாடி நரம்பெல்லாம்
நம் தலைவர் பெயரைப்
பச்சை குத்திவைத்த
பண்பரசன் நந்தகுமார்
வரலாற்றுச் சிறப்பை
வடிவமைத்து வைத்திருந்தார்!

**எவருக்கும் எட்டாத
இலக்கியக் கற்பனையின்
உயரத்தைத் தொட்ட
ஒளிவாய்ந்த தலைவர்
கலைஞரின் சிலையைக்
கண்ணொற்றி மகிழும்
கலைவண்ண எழிலாக்கித்
தளபதியின் கைம்மலரால்
அவர்
திறப்பித்த போது...
திரண்டிருந்த திருக்கூட்டம்
எடுப்பித்த உணர்ச்சியை
எழுதவே முடியாது!**

இமயத்தைச் சுருக்கி
எட்டடி உயரத்தில்
எழுதிவைத்த பேரழகு!

எவர் நினைத்தாலும்
எடைபோட முடியாத
இலக்கிய ஆளுமையை
எழுநூறு கிலோ எடையில்
எழுப்பிவைத்த தனியழகு!
இமைமூடிக் கொண்டாலும்
இதயத்தில் ஒளிர்கின்ற
நனியழகு!

கவித்துவக் கனத்தோடு
திராவிடக் குணத்தோடு
திசையளந்து நின்ற
தீரத் தலைவனின்
இசையறிந்து சிலைவைத்த
இன்செயலைப் பாராட்டி,
முதல்வர் வாழ்த்தியது
முத்திரை நிகழ்ச்சியாய்
முகமலர்ச்சி தந்தது!

வெயிலூராய் விளங்கும்
வேலூரைத் தாண்டி
ஆம்பூரில் நிகழ்ந்த
அடுத்த சந்திப்பும்..
தீம்பாலிற் கலந்த
தேன்போலத் தானே
தித்தித்தது!

கண்டமுகம் தானென்று
காணாதார் உண்டா?
கண்டாலும் காணாமல்
போனாரும் உண்டா?
கைதொட்டுப் பூரிக்கக்
கருதாதார் உண்டா?
ஒப்புக்காய் நின்றவர்கள்
ஒருவரேனும் உண்டா?
அப்பாவென் றழைக்காத
மழலையர்கள் உண்டா?

இல்லை..
இல்லவே இல்லை!
எங்கே பார்த்தாலும்
எவரைப் பார்த்தாலும்
இவரைப் பார்க்கும் கண்கள்தான்
எனக்குத் தெரிந்தன!

‘கரித்துண்டுக்குள்
கண்மூடி இருக்கும்
நெருப்பைப் போலத்
தமிழ் மக்கள் நெஞ்சில்
தளபதி இருக்கிறார்’ என்பதை
அறுதியிட்டு உரைத்தன
அந்தப் பார்வைகள்!

வெற்றுக் கோஷங்களில்
வெற்றிகளைச் சுவைக்கும்
வீணர்களுக்கு...
அந்தப்
புதிய பார்வைகள்
புலப்படாது என்பதைப்
புரிய வைத்தன
இரண்டுநாள் நிகழ்வுகளும்!

நான்காண்டுக் கால
நல்லாட்சியின்
நம்பிக்கை முத்திரைகளைச்
சுமந்து கொண்டு
சூரியச் சுடர்களாய்
அணிவகுத்து நின்ற
ஆயிரம் ஆயிரம் முகங்களில்
அடுத்துவரும் தேர்தலின்
அமோக வெற்றி
அச்சடிக்கப்பட்டிருந்த
அழகை எல்லாம்
அடியேன்
வாசித்துக் கொண்டே
வந்து கொண்டிருந்தேன்!

எங்கெங்கு நோக்கினும்,
குவிந்த கரங்கள்!
கூப்பிடும் குரல்கள்!
கரங்களில் துடிப்பு!
குரல்களில் சிலிர்ப்பு!
மழைவானம் போல
மனமெல்லாம் குளிர்ப்பு!
முகமெல்லாம் தளிர்ப்பு!
என்னவொரு வியப்பு!
இமாலயத் திகைப்பு!

குழைக்கின்ற கவரியில்லை!
கொற்றவெண் குடையில்லை!
இழைக்கின்ற அன்புக்கு
எள்ளளவும் தடையில்லை
நடையாய் நடக்கின்றான்
நாடாளும் வேந்தன்!
படையாய்த் தொடர்கின்றார்
பாசமுள்ள மக்கள்!

ஏனிந்தத் தொடர்ச்சி?
ஏனிந்த எழுச்சி?
என்றெண்ணிப் பார்த்தால்
‘பளிச்’சென்று தெரியும்
பகுத்தறிவு வளர்ச்சி!

இவரிடம்..
இனபேதம் இல்லை!
இனவாதம் இல்லை!
மதவாதம் என்னும்
மடவாதம் இல்லை!
சாதிகளைக் கிளறும்
சதிவாதம் இல்லை!
ஆனால்...
பெரியாரின் கொள்கைப்
பிடிவாதம் உண்டு!
அண்ணாவின் கொள்கை
அடிநாதம் உண்டு!
கலைஞரை நிகர்க்கும்
மதிவாதம் உண்டு!
மூவரையும் உள்வாங்கி
முளைத்த காரணத்தால்
யாவரையும் அதிரவைக்கும்
ரசவாதம் உண்டு!

அதனால்தான் கலைஞரை விட
ஆபத்தானவர் இவரென்று
அறிவித்துப் பகைப்புலம்
அதிர்ந்து கிடக்கிறது!

‘மக்களிடம் செல்’லென்னும்
மகத்தான மொழியொன்றைச்
‘சிக்’கெனப் பிடித்துச்
செயலாகிப் புயலாகி
மக்கள் வெள்ளத்தில்
நீந்துகிறார் நம் முதல்வர்!
வெற்றிப் பதாகையை
ஏந்துகிறார் நம் முதல்வர்!
மகிழ்ச்சியெனும் அமுதத்தை
மாந்துகிறார் நம் முதல்வர்!

**திட்டங்கள் அறிவிப்பு!
திறப்புவிழா மகிழ்விப்பு!
அங்கங்கும் ஏழைகளைத்
தேடி அரவணைப்பு!
தாய்மார்கள் உயர்வுக்குத்
தனியான முனைப்பு!
மாணவரைக் கண்டால்
மாதாபோல் கவனிப்பு!
‘ஆனவரை உழைப்பேன்
அஞ்சேன்’ எனும் திளைப்பு!
இவை
அத்தனையும் இணைந்த
அழகான தொகுப்பு
நடமாடக் கண்டால்
கண்கள் இனிக்காதா!
கவிதை பிறக்காதா!
இவரே தமிழ்நாட்டின்
இன்னுமொரு தந்தையென்று
வாய்கள் திறக்காதா!
வானமுதம் சுரக்காதா!
கரக்கம்பம் எல்லாம்
கழகக் கொடி பறக்காதா!**

பறந்ததே திருப்பத்தூர்
மாநாட்டில்!
காவிரி பெருக்கெடுத்துக்
கரைமீறி ஓடிவரும்
ஆர்வத்தில் குவிந்த
அத்தனை மக்களும்
தளபதியின் முகம்பார்த்துத்
தழைத்தார்களே...
தலைவா..தலைவா என்று
அழைத்தார்களே..
அடடா...ஓ!

‘கண்கொள்ளாக் காட்சி’யென்று
களிப்பார்களே..
அது இதுதானா..!

‘கடலலைபோல் மக்கள் வெள்ளம்’
என்று
கழறுவார்களே..
அது இதுதானா!
‘படை பெருத்ததோ
பார் சிறுத்ததோ’
என்று
பாடுவார்களே..
அதுவும் இதுதானா!
என்று
கணிக்கவே முடியாமல்
கலங்கிப்போய் நிற்கிறேன்
நான்!

‘எதிலும் வல்லவர் வேலு’
என்று
சும்மாவா சொன்னார்
சொற்றமிழ்க் கலைஞர்!

கால்பட்ட தடமெல்லாம்
கண்பட்டு விடுமாறு
கலைவண்ணம் செய்வதில்
ஆழங்கால் பட்ட
அற்புத மனிதர் அவர்!

ஈடுபட்டார் ஒருசெயலில்
என்றால்.. அதற்காகப்
பாடுபட்டுக் கடைசிவரை
பம்பரமாய்ச் சுழல்கின்ற
பண்பாளர் அவர்!

கழக வரலாற்றுக்
களங்கள் அனைத்திலும்
கலந்து கலக்கிய
கலைஞரின் சீடரவர்!

இழப்பைப் பற்றிய
எந்தக் கவலையும்
தலைகாட்ட விடாமல்
தலைநிமிர்ந்து நிற்கும்
தங்கத் தளபதியின்
தளபதி அவர்!



டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்

‘எடுத்தார் முடித்தார்’
என்பதுதான் இதுவரைக்கும்
எ.வ.வேலுவின்
இலக்கணமாய் இருந்தாலும்
தலைக்கனமே இல்லாத
தலைவரின் தொண்டர் அவர்!

சாலையில் ஓடும்
குதிரையாய் இல்லாமல்
பந்தயக் குதிரையாய்ப்
பாய்ந்தோடும் வல்லவர் அவர்!

இளைப்போ களைப்போ
ஏனென்ற சலிப்போ
இமைப்போதும் இல்லாமல்
இயக்கமே உயிரென்று
எந்நாளும் உழைக்கும்
ஏகாந்தி அவர்!
அருமைத் தலைவரின்
ஆட்சித் திறத்துக்கு
மாட்சிமை சேர்க்க
மலர்ந்த முகத்தோடு
அவருழைத்த உழைப்பின்
கம்பீரம் பறந்தது..
காணும் திசையெல்லாம்
கழகக் கொடிகளாய்!

வயதின் முதிர்ச்சியை
வழித்தெறிந்து விட்டுச்
செயலின் கிளர்ச்சியைச்
சித்திரிக்கத் தெரிந்த
தொண்டுச் சிகரம்
துரைமுருகன் அவர்கள்
முதல்வரோடு இருந்து
முனைப்போடு பணிசெய்தார்!

‘ஆகா என்று எழுந்தது பார்
யுகப் புரட்சி’ என்றான் பாரதி!
அந்த வரிகளை
அழுத்தி உச்சரிக்கும்
எழுச்சி இதழாகத்தான்
இருக்கப்போகிறது
இருபத்தாறு தேர்தல்!
தந்தை பெரியார்
பேரறிஞர் அண்ணா
தலைவர் கலைஞர் போன்றவர்கள்
ஓங்கி வளரும்
‘ஒக்’ மரம் போன்றவர்கள்!
உறுதியும் பயனும்
உடையதாய்ச் செழித்து
வான்தொட ஓங்கி
வளர்ந்து நிற்பதற்கு
‘ஒக்’ மரங்களுக்கு
ஒரு நூற்றாண்டு தேவைப்படுகிறது!

உறுதியும் இல்லாமல்
ஒரு பயனும் நல்காமல்
களைபோல் முளைக்கின்ற
கள்ளிச் செடிகள்
இரண்டே ஆண்டில்
வளர்ந்து விடுகின்றன!

முப்பெருந் தலைவர்களின்
முகமெடுத்து அகமெடுத்து
முற்போக்குத் திறமெடுத்து
முப்போதும் உழைத்துவரும்
நம் முதலமைச்சர் அவர்கள்
மற்றுமொரு ‘ஒக்’ மரமாக
ஓங்கி உயர்ந்து நிற்கிறார்!

களத்தை முள்ளாக்கும்
கள்ளிச் செடிகளை
வெள்ளைச் சோளமாய்
உள்ளம் படைத்த
உயர்ந்த தமிழ்மக்கள்
அட்டியில்லாமல்
வெட்டி எறியத்தான்
போகிறார்கள்!
எட்டி இருக்கும்
இமயமும் அதனை

ஏறிட்டுப் பார்க்கத்தான்
போகிறது!

**‘மக்களைச் சிந்திப்பவன்தான்
மக்களைச் சந்திக்க முடியும்
மக்களைச் சந்திப்பவன்தான்
மகுடத்தைச் சிந்திக்க முடியும்’
என்பதை வலியுறுத்தி
திருப்பத்தூரின்
திருப்புமுனைப் பேச்சை
நிறைவாய் நிகழ்த்தினார் முதல்வர்!**

‘இளைஞர்கள் விவசாயிகள்
எண்ணற்ற பொதுமக்கள்
தாங்கும் குணம்படைத்த
தங்கத் தாய்மார்கள்
அனைவரும் கூடி
ஆராதிப்பதைக் கண்டால்..
எனக்குத் தோன்றுகிறது,
இருபத்தாறு மட்டுமல்ல
முப்பத்தொன்றிலும் நாம்தான்
முப்பத்தாறிலும் நாம்தான்’ என்று
அவர் முழங்கிய போது
தொடங்கிய கரவொலி
அடங்குவற்கு
நிமிடங்கள் அல்லவா ஆனது!

அதிர்ந்து கிடக்கிறது
அரசியல் பகைவர்களின்
அந்தப்புரங்கள்!
எந்தப்புறம் பார்த்தாலும்
எஃகுக் கோட்டையாய்
எழுந்து நிற்கிறது தி.மு.கழகம்!

வேலூரிலும் ஆம்பூரிலும்
திருப்பத்தூரிலும்
வாணியம்பாடியிலும்
ஆட்சிச் சுவடுகளை
அழுந்தப் பதிக்கும்
அனேக சாதனைகளை
அவரின் திருக்கரங்கள்
செய்து முடித்துத்
திரும்பிய மேன்மைக்குத்
திருஷ்டி சுற்றித்தான்
போட வேண்டும்!

இரண்டுநாள்
அரசுமுறைப் பயணமாக
அருமைத் தலைவர்
அணிசூழப் புறப்பட்டார்

அவரோடு நிழலாய்
அடியேனும் பங்கேற்று
அடைந்த புண்ணியத்தை
யான்கற்ற வார்த்தைகளால்
இயம்பத் துடித்தேன்
புலம்பித் தவித்தேன்!
அந்தத் தவிப்பைத்தான்
அப்படியே தமிழாக வடித்தேன்!

‘கண்டேன்..கண்டேன்
கண்டறியாதன கண்டேன்
உண்டேன்.. உண்டேன்
உவமை கூற முடியாத
உற்சாகத் தேனுண்டேன்’
என்று
வரலாற்று உணர்வோடு
துடித்தேன்!
அந்த வாசமிகு நிகழ்வுகளை
பாசமிகு நெஞ்சோடு
படைத்தேன்!

பனிக்கட்டி போல
உறைந்து கிடந்த
உள்ளத்தை எண்ணத்தை
உருக்கி எடுத்து
ஓடவிட்ட மகிழ்வில்
ஒன்று மட்டும்
உறுதியாய்ச் சொல்கிறேன்;

தலையுள்ள வரைக்கும்
தலைவர் திருவடியில்
தலைவைக்கும் தொண்டன்றிப்
பிறிதொன்றும் வேண்டாத
பெருந்தொண்டன்..
நானே!